THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Monday, the 24th February 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Obscene Pictures.

* 27 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether obscene badges were sold at a shop in Mount Road, Madras , and

(*b*) whether the Government are aware of the sale of such obscene pictures and the secret screening of obscene films?

ஆபாசப் படங்கள்

திரு என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மவுண்ட் ரோடில் உள்ள ஒரு கடையில் ஆபாச சின்னங்கள் (Badges) விற்கப்பட்டனவா ?

(இ) இதைப் போன்ற ஆபாச படங்கள் விற்கப்படுவதும் இரகசியமாக ஆபாச சினிமா காட்டுவதும் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகரத்தில் அனுமதியளிக்கப்படாத இடங்களில் ஆபாசப் படங்கள் கள்ளத்தனமாகத் திரையிடப்படுவது பற்றி அரசாங்கத்திடம் எந்தவிதத் தகவலும் இல்லை. மாநகரக் காவல் துறையினர் சென்னை மாநகரில் ஆபாச நிழற்படங்கள் தயாரிக்கப்படுவதையும் புத்தகக் கடைகளிலும், புத்தக விற்பனையிடங்களிலும் அவை விற்பனை செய்யப்படுவதையும், சுற்றோட்ட முறையில் குறித்தகாலத்துக்கு ஒரு முறை வழங்கப்படுவதையும் கட்டுப்படுத்த, திங்கள் ஒரு முறையும், மூன்று திங்களுக்கு ஒரு முறையும் திடீர் சோதனைகள் நடத்தி வருகின்றனர். அத்தகைய படங்களை விற்பனை செய்பவர்கள் மீது சட்டப்படி வழக்குத் தொடர்ந்தும் வருகின்றனர்.

திரு என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இதுவரை அப்படி எத்தனை இடங்களில் சோதனை போடப்பட்டது? என்ன வகையான படங்கள் பிடிபட்டன? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு என்ன தண்டனை கொடுக்கப்பட்டது என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: இந்தியன் லாப் சென்டர் என்ற இடத்தில் அப்படிப்பட்ட படங்கள், பாட்ஜ்கள் விற்பனை செய்யப்பட்டன. அவை என்னென்ன என்று இங்கே சொல்வதற்குக் கூச்சமாக இருக்கிறது. 22 படங்கள் இருக்கின்றன. 514 படங்கள் கைப்பற்றப்பட்டு அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பார்க்க விரும்பினால் தனியாக வந்து அவற்றைப் பார்த்துக் கொள்ளலாம்.

திரு வி. தங்கபாண்டியன்: இந்த ஆபாசப் படங்களை விற்பதன் மூலம் லாபம் சம்பாதிக்கும் சிலர் அதைப் போன்றே ஆபாச நடனங்கள் நடத்தி அவற்றின் மூலம் லாபம் சம்பாதிக்கும் முறை தமிழகத்தில் பரவியிருக்கிறது. அது பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: குறிப்பாக அவற்றைக் குறித்து கவனத்திற்கு கொண்டுவந்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு எம். எத்திராஜுலு: சில ஸ்டுடியோக்களிலும் பிற இடங்களிலும் கூட விருந்துகள் நடந்தால் அங்கெல்லாம் இந்தப் படங்கள் காட்டப்பட்டன என்று சொல்லப்படுகிறது. அப்படி காட்டப்படுவதை இந்த அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ததா?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி: எங்காவது அதைக் கண்டுபிடித்திருந்தால் அதுபற்றி உறுப்பினர் அறிவித்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

Sales Tax.

*28 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the All Dealers Association, T. Nagar, Madras at its meeting on 22nd January 1968 passed a resolution, condemning the levy of sales tax this year four times higher than that of last year effected by the Sales-tax officers and have sent the resolution to the Government; and

(*b*) if so, the action taken thereon by the Government?

விற்பனை வரி

திரு என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை தியாகராய நகர் சர்வ வியாபாரிகள் சங்கம் 1968 ஜனவரி 22-ம் தேதி கூடி விற்பனை வரி அதிகாரிகள் சென்ற காலங்களைக் காட்டிலும் நாலு பங்கு அதிக வரி விதித்தார்கள் என்று கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி தமிழக அரசுக்கு அனுப்பியுள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?